24.08.2022
அசல் வழக்கு எண்: 119/2018

வா.சா.1 சாட்சி சந்தோசம் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சந்து எனக்கு சொந்தமானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கானது இடத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா அல்லது சந்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சந்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்து எந்த சர்வே நம்பரில் உள்ளது என்றால் சர்வே எண். 222 ல் உள்ளது. என்ன உட்பிரிவு என்றால் நான் படிக்காதவன் அதனால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் கிழமேல் 11 அடி தென்வடல் 36 அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட 36x11 அடியைதான் சந்து பகுதி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 36x11 அடிபோக மேலும் 5 அடி சந்து உள்ளது. 36x11 அடி இடத்திற்கு எந்த திசையில் 5 அடி சந்து உள்ளது என்றால் கிழக்கு பக்கமாக உள்ளது. நான் தற்போது 36x11 அடி இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது கிழக்கு பக்கம் உள்ள 5 அடி சந்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரண்டிற்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன்.

நான் இரண்டு இடத்திற்கும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 36x8 அடி என்று சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். 36x11 அடிக்குதான் எனக்கு பட்டா கொடுத்துள்ளார்கள். அதுதான் சரியான அளவு. இந்த வழக்கில் அடி அளவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம்

சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் 36x11 அடி இடத்தில் எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்பதால்தான் பிராது திருத்தம் செய்ய நடவடிக்கை தற்போது வரை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட அய்யாவு மகன் ஜெயகொடி என்பவர் யார் என்றால் எனது சியானும் ஜெயகொடியின் சியானும் உடன் பிறந்தவர்கள் ஆவர். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 2 கிரைய பத்திரத்தில் விஸ்திரணம் கிழமேல் 8 அடி என்றும் தென்வடல் 36 அடி என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் கிழமேல் 11 அடி என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 36x8 அடி என்று சொல்லப்பட்டுள்ளது சரியா தவறா என்றால் தவறு ஆகும். இந்த தவறை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிந்து கொண்டேன். அதன்பிறகு மீதஇடத்திற்கு சேர்த்து பத்திரம் பதிந்துள்ளேன் .

அந்த பத்திரம் எப்போது பதியப்பட்டது என்றால் 6 மாதத்திற்கு முன்பு பதிந்தேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மீத இடத்திற்கு கிரையம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு பத்திர பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)